**(Chapter XXV of BNSS 2023)**
**( Section 308 BNSS 2023)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.CC.No. 124/2022**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ராஜேஷ்குமார் | **Caste** | |
| **Father / Husband Name** | கிருஷ்ணமூர்த்தி | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலாளலத்தூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தேன். தற்போது எந்த பணியும் செய்யவில்லை. கடந்த 16.01.2021 அன்று கொத்தக்குப்பம் ரேஷன் கடை அருகே இரவு 09.30 மணியளவில் எனது அண்ணனை ராம்கி என்பவர் அடித்துகொண்டிருந்தார்.

அதனை தடுக்க சென்ற என்னையும் பீர் பாட்டிலால் வது பக்க கண்ணில் அடித்து காயப்படுத்தினார். எனது அண்ணனையும் அடித்து மூக்கின் தண்டுவடம் உடைத்துவிட்டார். பின்னர் எனது உறவினர் விக்னேஷ் 108 ஆம்புலன்ஸ்க் போன் செய்து எங்களை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு முடியாது என்று வேலூர் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைகாக சேர்த்தார்கள்.

நான் ஒரு மாதமாக சிகிச்சையில் இருந்தேன். தற்போது எனது இடது பக்க கண் பார்வை பறிபோனது. நான் சிகிச்சயைில் இருந்தபோது வாக்கமூலம் பதிவுசெய்தார்கள். நீதிமன்றத்தில் என்முன்பாக

காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையானார். வாய்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. ஆகவே வினோத்குமார் எதிர் அரசு வழக்கின்படி குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**(Chapter XXV of BNSS 2023)**
**( Section 308 BNSS 2023)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.CC.No. 124/2022**

**DEPOSITION OF WITNESS FOR PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ஜெயகுமார் | **Caste** | |
| **Father / Husband Name** | கிருஷ்ணமூர்த்தி | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலாளலத்தூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் மேஸ்திரியாக வேலை செய்துவருகிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் பொங்கல் தினத்தின்போது புதூர் ரேஷன் கடை அருகே இருந்தேன். அப்போது இரவு சுமார் 09.30 மணியளவில் என்னை பீர் பாட்டிலால் ராம்கி அடித்துவிட்டார். அப்போது எனக்கு ரத்தம் அதிகமாக வடிந்தது. ஆகவே நான் எனது தம்பியை அழைத்தேன். எனது தம்பி வந்தார். அவரையும் ராம்கி அடித்துவிட்டார். பின்னர் என்னை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கற்றரிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையானார். வாய்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. ஆகவே வினோத்குமார் எதிர் அரசு வழக்கின்படி குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**Deposition of Witness** **Page. No.**

**(Chapter XXV of BNSS 2023)**
**( Section 308 BNSS 2023)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.CC.No. 124/2022**

**DEPOSITION OF WITNESS FOR PW.3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | விக்னேஷ் | **Caste** | |
| **Father / Husband Name** | மோகன் | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலாளலத்தூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் தனியார் நிதி நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன். கடந்த 16.01.2021 அன்று இரவு சுமார் 09.30 மணியளவில் ஆஜர் எதிரி ராம்கி ராஜேஷ் மற்றும் ஜெயகுமாரை அடித்துவிட்டார். நான் 108 அவசர ஊர்திக்கு போன் செய்து குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். அங்கு முடியாது என்று கூறியதால் மேல் சிகிச்சைகாக அடுக்கம்பாறையில் உள்ள வேலூர் அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையானார். வாய்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. ஆகவே வினோத்குமார் எதிர் அரசு வழக்கின்படி குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**Deposition of Witness** **Page. No.**

**(Chapter XXV of BNSS 2023)**
**( Section 308 BNSS 2023)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.CC.No. 124/2022**

**DEPOSITION OF WITNESS FOR PW.4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சரஸ்வதி | **Caste** | |
| **Father / Husband Name** | ஜெயக்குமார் | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மேலாளலத்தூர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 16.01.2021 அன்று இரவு 09.30 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்து எனது மகள் வந்து என்னிடம் அப்பாவையும், சித்தப்பாவையும் ராம்கி என்பவர் அடித்துகொண்டிருந்தார் என்று கூறினார். நான் சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது எதிரியிடம் எனது கணவர் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அருகில் இருந்தவர்கள் ராம்கி எனது கணவரிடம் பணம் கேட்டு கொடுக்காததால் பீர் பாட்டிலால் எனது கணவரை ராம்கி அடித்ததாக அக்கம்பக்கத்தில் இருந்தர்கள் கூறினார்கள். உடனே விக்னேஷ் ஆம்புலன்ஸ்கு போன் செய்து மருத்துவ மனையில் அனுமதித்தார். பின்னர் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையானார். வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. ஆகவே வினோத்குமார் எதிர் அரசு வழக்கின்படி குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.Dr.J.Stalin.,M.l.,Ph.D.,
Judicial Magistrate
Gudiyatham.